**DECEMBER 2017** **P/ID 28501/PCMA**

Time : Three hours Maximum : 100 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. What is Oversubscription?

   மிகை பங்கொப்பம் என்றால் என்ன?

2. Define - Pure Underwriting.

   சுத்த ஒப்புறுதி – வரையறு.

3. Define - Consolidation of Shares.

   பங்குகள் ஒருங்கிணைப்பு – வரையறு.

4. What is Minority Interest?

   சிறுபான்மையர் நலன் என்றால் என்ன?

5. What is called "Non-Banking Assets"?

   'வங்கி சார சொத்துகள்' என அழைப்படுவது எது?

6. What do you mean by Inflation Accounting?

   பணவீக்க கணக்கியல் பற்றி நீ அறிவது யாது?

7. Write a Short note on "Non-mandatory Accounting Standards".

   'கட்டாயமில்லாத கணக்கியல் தரநிலைகள்' பற்றி சிறு குறிப்பு எழுதுக.

8. What is professional ethics?

   தொழில் நெறி என்றால் என்ன?

9. Define — Dividends.

   பங்காதாயம் – வரையறு.

10. State any four difference between shares and debentures.

    பங்குகள் மற்றும் கடனீட்டுத்தரங்களுக்கிடையேயான வேறுபாடுகள் ஏதேனும் நான்கினை தெரிவி.

PART B — (5 × 6 = 30 marks)

Answer ALL questions.

11. (a) Nail & Co. Ltd was registered with an authorized capital of Rs. 20,00,000 divided into 20,000 shares of Rs. 100 each. The company offered 12,000 shares to the public which were payable: Rs. 20 per share on application, Rs. 40 per share on allotment and Rs. 40 on call. Application for 18,000 shares wee received on which the directors allotted as follows:

Applicants for 10,000 shares — Full

Applicants for 5,000 shares — 2,000 shares

Applicants for 3,000 shares— Nil

The excess application money was adjusted towards allotment. All the money due on allotment and call was fully received. Make the necessary entries in the company's books.

நல்லி நிறுமம் அனுமதிக்கப்பட்ட முதல் ரூ. 20,00,000த்தை 20,000 பங்குகள் ரூ. 100 வீதம் கொண்டுள்ளது. இந்த நிறுமம் 12,000 பங்குகளை பின்வருமாறு செலுத்த பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 20, ஒதுக்கீட்டின் போது ரூ. 40 மற்றும் அழைப்பின் போது ரூ. 40ம் செலுத்த வேண்டும். 18,000 பங்குகளுக்கான விண்ணப்பம் பெறப்பட்டு கீழ்கண்டவாறு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது.

10,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – முற்றிலும்

5,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – 2,000 பங்குகள்

3,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – இல்லை

மிகுதியான விண்ணப்ப பணம் ஒதுக்கீட்டின் போது சரிசெய்து கொள்ளப்படும். அனைத்து ஒதுக்கீட்டு மற்றும் அழைப்பு தொகை முற்றிலும் பெறப்பட்டது. இந்த நிறும ஏட்டில் தேவையான குறிப்பேட்டு பதிவு தருக.

Or

(b) Bharat Ltd., issued 1,50,000 equity shares. The whole of the issue was underwriten as follows:

X- 50% Y–25% Z–25%

Applications for 1,20,000 share were received in all, out of which applications for 30,000 shares had the stamp of X, those for 15,000 shares that of Y and those for 30,000 shares that of Z. The remaining applications for 45,000 shares did not bear any stamp. Determine the liability of the underwriters.

பாரத் நிறுமம் 1,50,000 சமநிலைப்பங்குகளை வெளியிட்டது. அனைத்து வெளியீடுகளும் பின்வருமாறு ஒப்புறுதி செய்யப்பட்டது.

X- 50% Y–25% Z–25%

மொத்தமாக பெறப்பட்ட பங்கு விண்ணப்பம் 1,20,000-த்தில் 30,000 பங்குகளுக்கானதில் X-ன் முத்திரையும் 15,000 பங்குகளுக்கான விண்ணப்பத்தில் Y–ன் முத்திரையும் 30,000 பங்குகளுக்கு Z–ன் முத்திரையும் கொண்டுள்ளது. மீதமுள்ள 45,000 பங்குகள் விண்ணப்பத்தில் எந்த முத்திரையும் இல்லை. ஒப்புறுதியாளர்களின் பொறுப்பை தீர்மானிக்கவும்.

12. (a) From the Balance Sheets given below prepare a consolidated Balance Sheet of A Ltd. and its subsidiary company B Ltd.

Balance Sheet as on 30th June 1994

| Liabilities | A Ltd. (Rs.) | B Ltd. (Rs.) | Assets | A Ltd. (Rs.) | B Ltd. (Rs.) |
|---|---|---|---|---|---|
| Share Capital (Shares of Rs. 10 each) | 25,00,000 | 6,00,000 | Land & Building | 6,40,000 | 2,00,000 |
| | | | Machinery | 12,60,000 | 3,40,000 |
| General Reserve | 3,60,000 | 1,20,000 | Furniture | 1,40,000 | 60,000 |
| P & L A/c | 2,40,000 | 1,80,000 | 40,000 shares n B Ltd. | 5,00,000 | – |
| Trade Creditors | 3,50,000 | 1,00,000 | Stock | 4,10,000 | 2,50,000 |
| | | | Debtors | 3,80,000 | 1,00,000 |
| | | | Bank | 1,20,000 | 50,000 |
| | 34,50,000 | 10,00,000 | | 34,50,000 | 10,00,000 |

At the date of the acquisition by A Ltd. of its holding of 40,000 shares in B Ltd. the latter company had undistributed profits and reserves amounting to Rs. 1,00,000 none of which has been distributed since then.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து A நிறுமம் மற்றும் அதன் துணை நிறுமம் Bயின் தொகுப்பு இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்க.

30.6.1994க்கான இருப்பு நிலை குறிப்பு

| பொறுப்புகள் | A லிட் ரூ. | B லிட் ரூ. | சொத்துகள் | A லிட் ரூ. | B லிட் ரூ. |
|---|---|---|---|---|---|
| பங்கு முதல் பங்கு ரூ. 10 | 25,00,000 | 6,00,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 6,40,000 | 2,00,000 |
| | | | இயந்திரம் | 12,60,000 | 3,40,000 |
| பொதுகாப்பு | 3,60,000 | 1,20,000 | அலைகலன் | 1,40,000 | 60,000 |
| இலாப நட்ட க/கு | 2,40,000 | 1,80,000 | 40,000 பங்குகள் (B லிட்) | 5,00,000 | – |
| வியாபார கடனீந்தோர் | 3,50,000 | 1,00,000 | சரக்கிருப்பு | 4,10,000 | 2,50,000 |
| | | | கடனாளிகள் | 3,80,000 | 1,00,000 |
| | | | வங்கி | 1,20,000 | 50,000 |
| | 34,50,000 | 10,00,000 | | 34,50,000 | 10,00,000 |

A நிறுமத்தால் கையகப்படுத்திய தேதியன்று B நிறுமத்தின் 40,000 பங்குகள் வாங்கப்பட்ட போது B நிறுமத்தில் பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் மற்றும் காப்புத் தொகை ரூ. 1,00,000 இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

Or

(b) What is Internal Reconstruction? List out important legal provisions.

அக மறுசீர் அமைப்பு என்றால் என்ன? அதன் முக்கிய சட்ட ரீதியான விதிமுறைகளை பட்டியலிடுக.

13. (a) From the following particulars, prepare a profit and loss account of New Bank Ltd, for the year ended 31.12.1996.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Interest on loans | 2,60,000 | Interest on Cash Credits | 2,25,000 |
| Interest on fixed deposits | 2,80,000 | Rent and Taxes | 20,000 |
| Rebate on bills discounted | 50,000 | Interest on Overdrafts | 56,000 |
| Commission charged to customers | 9,000 | Directors and Auditor Fees | 4,500 |

| | | | |
|---|---|---|---|
| Establishment of Expense | 56,000 | Interest on saving bank A/c | 70,000 |
| Discount on bills discounted | 2,00,000 | Postage and telegrams | 1,500 |
| Interest on current accounts | 45,000 | Sundry charges | 1,800 |
| Printing and Advertisement | 3,000 | | |

பின்வரும் விபரங்களிலிருந்து நியூ வங்கி நிறுமத்தின் இலாப மற்றும் நட்ட கணக்கை (31.12.1996 வரையானது) தயாரிக்கவும்.

| விபரங்கள் | ரூ. | விபரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடன்கள் மீது வட்டி | 2,60,000 | ரொக்க கடன் மீதான வட்டி | 2,25,000 |
| நிலை வைப்பு மீது வட்டி | 2,80,000 | வாடகை மற்றும் வரி | 20,000 |
| சீட்டு தள்ளுபடி மீதான ஒதுக்கு | 50,000 | மேல்வரைப்பற்று மீதான வட்டி | 56,000 |
| வாடிக்கையாளர்க்கு சேர்த்த கழிவு | 9,000 | இயக்குநர் மற்றும் தணிக்கக்கட்டனம் | 4,500 |
| தோற்றுவிப்பு செலவுகள் | 56,000 | சேமிப்பு வங்கி க/கு மீதான வட்டி | 70,000 |
| சீட்டு தள்ளுபடி மீதான வட்டம் | 2,00,000 | தபால் மற்றும் தந்தி | 1,500 |
| நடப்பு கணக்கு மீதான வட்டி | 45,000 | பற்பல செலவுகள் | 1,800 |
| அச்சு மற்றும் விளம்பரம் | 3,000 | | |

Or

(b) What are the features of Social Responsibility Accounting?

சமூக பொறுப்புகள் கணக்கியலின் சிறப்பியல்புகள் யாவை?

14. (a) The following is given:

Balance Sheet of A Ltd. on March 31,2009

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share Capital: | | Land & Buildings | 1,00,000 |
| 2,000 14% Pref. Shares of Rs. 100 | 2,00,000 | Machinery & Plant<br>Patents | 2,50,000<br>40,000 |
| 1,000 Equity Shares of Rs.100 each Rs.75 paid | 75,000 | Stock at cost<br>Sundry Debtors | 55,000<br>1,10,000 |
| 3,000 Equity shares of Rs. 100 each Rs. 60 paid | 1,80,000 | Cash at Bank<br>Profit & Loss Account | 75,500<br>83,500 |

| | | | |
|---|---|---|---|
| 14% Debentures having a floating charge on all assets | 1,00,000 | | |
| Interest Outstanding | 14,000 | | |
| Creditors | 1,45,000 | | |
| | 7,14,000 | | 7,14,000 |

The company went into liquidation on the above date. The preference dividends were in arrear for two years. The arrears are payable automatically on liquidation. Creditors include a loan for Rs. 50,000 on the mortgage of Land and Buildings. The assets were realized as follows:

| | |
|---|---|
| Land and Buildings | Rs. 1,20,000 |
| Machinery and Plant | 2,00,000 |
| Patents | 30,000 |
| Stock | 60,000 |
| Sundry Debtors | 80,000 |

The expenses of liquidation amounted to Rs. 10,900. The liquidator is entitled to a commission of 3 per cent on all assets realized except cash and a commission of 2 % on amounts distributed among unsecured creditors. Preferential creditors amount to Rs. 15,000. Assume the payment was made on September 30, 2009.

Prepare the Liquidator's final Statement of Account.

பின்வருவன கொடுக்கப்பட்டுள்ளது.

அலுண் நிறுமத்தின் 31.3.2009க்கான இருப்பு நிலை குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல்: | | நிலம் மற்றும் கட்டிடம் | 1,00,000 |
| 2,000 14% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம் | 2,00,000 | இயந்திரம் மற்றும் பொறி | 2,50,000 |
| | | காப்புரிமை | 40,000 |
| 1,000 சமநிலை பங்குகள் @ 100 வீதம் ரூ. 75 செலுத்தியது | 75,000 | அடக்கத்தில் சரக்கிருப்பு | 55,000 |
| | | பற்பல கடனாளிகள் | 1,10,000 |
| 3,000 சமநிலை பங்குகள் @ ரூ. 100 வீதம் ரூ. 60 செலுத்தியது | 1,80,000 | வங்கிவச ரொக்கம் | 75,500 |
| | | இலாப நட்ட க/கு | 83,500 |
| 14% கடனீட்டுப்பத்திரம் (அனைத்து சொத்து மீதான மிதவை பொருப்பு) | 1,00,000 | | |
| கொடுபட வேண்டிய வட்டி | 14,000 | | |
| கடனீந்தோர்கள் | 1,45,000 | | |
| | 7,14,000 | | 7,14,000 |

மேலே உள்ள தேதியில் இந்த நிறுமம் கலைப்புக்குள்ளானது. முன்னுரிமைப் பங்காதாயம் இரண்டு ஆண்டு கால நிலுவையாக உள்ளது. கலைப்பின் பேரில் நிலுவை தன்னிச்சையாக செலுத்தப்படும். கடனீந்தோர்களில் ரூ. 50,000 மதிப்புள்ள கடன், நிலம் மற்றும் கட்டிடத்தை அடமானமாக கொண்டது. பின்வருமாறு சொத்துகள் விற்று பணமாக்கப்பட்டது.

| | |
|---|---|
| நிலம் மற்றும் கட்டிடம் | ரூ. 1,20,000 |
| பொறி & இயந்திரம் | ரூ. 2,00,000 |
| காப்புரிமை | ரூ. 30,000 |
| சரக்கிருப்பு | ரூ. 60,000 |
| பற்பல கடனாளிகள் | ரூ. 80,000 |

நிறும கலைப்பிற்கான செலவு தொகை ரூ. 10,900 ஆகும். சொத்துகள் விற்று பணமாக்கப்பட்டதில் (ரொக்கம் நீங்கலாக) 3 சதவீத கழிவும் பிணையமற்ற கடனீந்தோர்க்கு வழங்கப்படும் தொகையில் 2 சதவீதம் கழிவும் பெற கலைப்பாளர் உரிமையுடையவர். முன்னுரிமை கடனீந்தோர்களின் தொகை ரூ. 15,000. அனைத்து செலுத்துகையும் செப்டம்பர் 30, 2009 அன்று நடைபெறும் எனக் கொள்க.

கலைப்பாளரின் இறுதி கணக்கு அறிக்கை தயார் செய்க.

Or

(b) What is Audit Committee? State its the functions,

தணிக்கை குழு என்றால் என்ன? அதன் பணிகளைத் தெரிவி.

15. (a) From the following particulars, determine the maximum remuneration available to a full time director of a manufacturing company.

The Profit & loss Account of the company showed a net profit of Rs. 40,00,000 after taking into account the following items:

| | Particular | Rs. |
|---|---|---|
| (i) | Depreciation (including special depreciation of Rs. 40,000) | 1,00,000 |
| (ii) | Provision for income tax | 2,00,000 |
| (iii) | Donation to political parties | 50,000 |
| (iv) | Ex-gratia payment to a worker | 10,500 |
| (v) | Capital profit on sale of assets | 15,000 |

பின்வரும் விபரங்களிலிருந்து ஒரு தயாரிப்பு நிறுமத்தின் முழு நேர மேலாண்மை இயக்குநர்க்கு கொடுக்க கூடிய உட்சபட்ச ஊதியத்தை தீர்மானிக்கவும்.

பின்வரும் இனங்களை கணக்கில் கொண்டபின் இந்த நிறுமத்தின் இலாப நட்ட கணக்கு ரூ. 40,00,000ம் நிகர இலாபம் காட்டியது.

| | விபரம் | ரூ. |
|---|---|---|
| (i) | தேய்மானம் (சிறப்பு தேய்மானம் ரூ. 40,000 உட்பட) | 1,00,000 |
| (ii) | வருமான வரிக்கான ஒதுக்கு | 2,00,000 |
| (iii) | அரசியல்வாதிக்கு அளித்த நன்கொடை | 50,000 |
| (iv) | பணியாளர்க்கு அளித்த மிகை வெகுமதி (Ex-gratia) | 10,500 |
| (v) | சொத்துக்கள் விற்பனை மீதான மூலதன இலாபம் | 15,000 |

Or

(b) State various roles of Chartered Accountant.

பட்டய கணக்காளரின் பல்வேறு பங்குகளை தெரிவி.

PART C — (5 × 10 = 50 marks)

Answer ALL questions.

16. (a) The balance sheet of Grey limited as on 31-12.85 was follows:

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share Capital: | | Fixed Assets | 8,00,000 |
| Equity share capital | 5,00,000 | Investments | 1,00,000 |
| 7% Redeemable Pref. Shares | 3,00,000 | Cash | 2,00,000 |
| Reserves : | | Other Current Assets | 5,00,000 |
| Share premium | 50,000 | | |
| Capital Reserve | 1,00,000 | | |
| Revenue reserve | 2,00,000 | | |
| 6% Debentures | 3,00,000 | | |
| Creditors | 1,50,000 | | |
| | 16,00,000 | | 16,00,000 |

Both the redeemable preference shares and debentures were redeemed by taking the following steps:

(i) It issued 2000 equity shares of Rs. 100 each at a premium of 10%. The shares were fully subscripted and paid.

(ii) It sold the investments for Rs. 90,000.

(iii) It arranged a bank overdraft to the extent necessary.

Pass necessary journal entries and prepare balance sheet immediately after the redemption.

பின்வரும் இருப்பு நிலைக்குறிப்பு கிரே நிறுமத்தின் 31.12.85 வரையானது ஆகும்.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலை சொத்துகள் | 8,00,000 |
| சமநிலை பங்கு முதல் | 5,00,000 | முதலீடுகள் | 1,00,000 |
| 7% மீ.மு. பங்குகள் | 3,00,000 | ரொக்கம் | 2,00,000 |
| காப்புகள்: | | மற்ற நடப்பு சொத்து | 5,00,000 |
| பங்கு முனைமம் | 50,000 | | |
| மூலதன காப்பு | 1,00,000 | | |
| வருவாய்யின் காப்பு | 2,00,000 | | |
| 6% கடனீட்டு பத்திரம் | 3,00,000 | | |
| கடனீந்தோர்கள் | 1,50,000 | | |
| | 16,00,000 | | 16,00,000 |

பின்வரும் நடவடிக்கையின் மூலமாக மீள்தகு முன்னுரிமை பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரம் மீட்பு செய்யப்பட்டது.

(i) அது 2000 சம நிலைப்பங்குகளை ரூ. 100 வீதம் 10% முனைமத்தில் வெளியிட்டு முழுமையான தொகை பெறப்பட்டது

(ii) அது ரூ. 90,000க்கு முதலீடுகளை விற்பனை செய்தது.

(iii) தேவையான அளவு வங்கி மேல்வரைப்பற்று ஏற்பாடு செய்து கொண்டது.

தேவையான குறிப்பேட்டு பதிவு தந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்திய பின்னர் தோன்றும் இருப்பு நிலை குறிப்பு தயாரிக்கவும்.

Or

(b) Ascertain the value of goodwill of P. Co. Ltd. carrying on business as retail traders from the following information.

Balance Sheet as on 31st December: 2002

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Paid-up Capital: | | Goodwill | 25,000 |
| 2,500 Shares of Rs. 100 each | 2,50,000 | Land and Buildings at cost | 1,10,000 |
| Profit and Loss Account | 56,650 | | |
| Bank Overdraft | 58,350 | Plant and Machinery at cost Less Depreciation | 1,00,000 |
| Sundry Creditors | 90,500 | | |
| Provision for Taxation | 19,500 | | |
| | | Stock at cost | 1,50,000 |
| | | Book Debts less Provision for Doubtful Debts | 90,000 |
| | 4,75,000 | | 4,75,000 |

The company commenced operations in 1998 with a paid up capital as aforesaid of Rs. 2,50,000. The profits earned, before providing for taxation, have been as 1998 Rs. 61,000; 1999 Rs. 64,000; 2000 Rs. 71,500; 2001 Rs. 78,000 and 2002 Rs. 85,000.

You may assume that income-tax at the rate of 50% has been payable on these profits. The average dividend paid by the company for the four years is 10% which is taken as reasonable return expected on the capital invested in the business.

பின்வரும் தகவல்களைக் கொண்டு சில்லரை வியாபாரத்தை கொண்டுள்ள P நிறுமத்தின் நற்பெயர் மதிப்பை கணக்கிடுக.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட முதல்: | | நற்பெயர் | 25,000 |
| 2,500 பங்குகள் @ ரூ. 100 வீதம் | 2,50,000 | நிலம் & கட்டிடம் (அடக்கம்) | 1,10,000 |
| இலாப மற்றும் நட்ட கணக்கு | 56,650 | | |
| வங்கி மேல்வரைப்பற்று | 58,350 | பொறி & இயந்திரம் (அடக்கம்) கழிக்க தேய்மானம் | 1,00,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 90,500 | | |
| வரிக்கான ஒதுக்கு | 19,500 | | |

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| | | சரக்கிருப்பு அடக்கத்தில் | 1,50,000 |
| | | ஏட்டு கடன் கழிக்க ஐயக்கடன் ஒதுக்கு | 90,000 |
| | 4,75,000 | | 4,75,000 |

இந்த நிறுமத்தின் செயல்பாடுகள் 1998 அன்று ரூ. 2,50,000 செலுத்தப்பட்ட மூலதனத்துடன் தொடங்கியது. வரிக்கான ஒதுக்கு செய்யும் முன்னர் இலாபம் ஈட்டியது முறையே 1998 ரூ. 61,000; 1999 ரூ. 64,000; 2000 ரூ. 71,500; 2001 ரூ. 78,000 மற்றும் 2002 ரூ. 85,000 ஆகும்.

இந்த இலாபத்தில் வருமான வரியாக 50% செலுத்தப்பட்டது என அனுமானம் செய்து கொள்க. இந்த நான்கு ஆண்டுகளில் இந்த நிறுமம் 10% பங்காதாயம் செலுத்தியுள்ளது. இது இத்தொழிலுக்கு எதிர்பார்த்த ஆதாயமாகவும் உள்ளது எனக் கொள்க.

17. (a) A Ltd. and B Ltd. were amalgamated on and from 1st April, 2003. A new company AB Ltd. was formed to take over the business of existing companies. The balance sheets of A Ltd. and B Ltd. as on 31st March, 2003 are given below:

(figures in thousands Rs.)

| Liabilities | A Ltd. | B Ltd. | Assets | A Ltd. | B Ltd. |
|---|---|---|---|---|---|
| Share Capital: | | | Fixed Assets | 4,800 | 3,200 |
| Eq. Shares of Rs. 10 each | | | Less: | 800 | 600 |
| 12% Preference shares | 2,400 | 1,600 | Deprecation | | |
| of Rs. 100 each | 1,200 | 800 | | 4,000 | 2,600 |
| Reserve and Surplus: | | | Investments | 1,600 | 600 |
| Capital Reserve | 800 | 600 | Current | | |
| General Reserve | 1,200 | 600 | Assets: | | |
| Profit and Loss A/c | 400 | 200 | Stock | 1,200 | 600 |
| Secured Loans | 1,600 | 800 | Debtors | 1,600 | 800 |
| Trade Creditors | 1,200 | 400 | Cash & Bank | 1,200 | 600 |
| Tax Provision | 800 | 200 | | | |
| | 9,600 | 5,200 | | 9,600 | 5,200 |

Other Informations:

(i) Preference shareholders of the two companies are issued equivalent number of 15% preference shares of AB Ltd. at an issue price of Rs. 125 per share.

(ii) AB Ltd. will issue one equity share of Rs. 10 each for every share of A Ltd. and B Ltd. The shares are issued at a premium of Rs. 5 per share. Prepare the balance sheet of AB Ltd. on the assumption that the amalgamation is in the nature of merger.

A நிறுமம் மற்றும் B நிறுமம் ஏப்ரல் 1, 2003 அன்று ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது. AB நிறுமம் நிறுவப்பட்டு இரண்டு பழைய நிறுமத்தின் தொழிலை எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. A நிறுமம் B நிறுமத்தின் மார்ச் 31, 2003 வரையான இருப்பு நிலை குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | A நிறுமம் ரூ. | B நிறுமம் ரூ. | சொத்துக்கள் | A நிறுமம் ரூ. | B நிறுமம் ரூ. |
|---|---|---|---|---|---|
| பங்குமுதல் : | | | நிலை சொத்துக்கள் | 4,800 | 3,200 |
| சமநிலை பங்குகள் | | | கழி : | | |
| @ ரூ. 10 வீதம் | 2,400 | 1,600 | தேய்மானம் | 800 | 600 |
| 12% முன்னுரிமை பங்கு | | | | 4,000 | 2,600 |
| @ ரூ. 100 வீதம் | 1,200 | 800 | முதலீடுகள் | 1,600 | 600 |
| காப்பு மற்றும் உபரிகள் : | | | நடப்பு சொத்துக்கள்: | | |
| மூலதன காப்பு | 800 | 600 | சரக்கிருப்பு | 1,200 | 600 |
| பொதுகாப்பு | 1,200 | 600 | கடனாளிகள் | 1,600 | 800 |
| இலாப நட்ட க/கு | 400 | 200 | ரொக்கம் மற்றும் | | |
| பிணைய கடன் | 1,600 | 800 | வங்கி | 1,200 | 600 |
| வியாபார கடனீந்தோர் | 1,200 | 400 | | | |
| வரி ஒதுக்கு | 800 | 200 | | | |
| | 9,600 | 5,200 | | 9,600 | 5,200 |

மற்ற விபரங்கள்:

(i) இரண்டு நிறுமத்தின் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும் இணையாள அளவு எண்ணிக்கையுள்ள 15% முன்னுரிமை பங்குகள் AB நிறுமத்திலிருந்து ரூ. 125 வீதம் அளிக்கப்படும்

(ii) AB நிறுமத்தின் ஒவ்வொரு சமநிலைப் பங்குகள் ரூ. 10 வீதம் உள்ளதை A நிறுமத்தின் பங்குதாரர்கள் மற்றும் B நிறுமத்தின் பங்குதாரர்களுக்கு ரூ. 5 முனைமத்தில் வெளியிடப்படும்.

AB நிறுமத்தின் புதிய இருப்பு நிலைக் குறிப்பை ஒருங்கிணைப்பிற்கு பின்னர் தயாரிக்கவும். ஒருங்கிணைப்பு இணைப்பு அடிப்படையில் செய்யப்படுகிறது.

Or

(b) The following particulars relate to a limited company which has gone into voluntary liquidation. You are required to prepare the Liquidation Final Account allowing for his remuneration @ 2% on the amount realised on assets and 2% on the amount distributed to unsecured creditors other than preferential creditors:

| Particulars | Rs. |
|---|---|
| Unsecured Creditors | 2,24,000 |
| Preferential Creditors | 70,000 |
| Debentures | 75,000 |
| The assets realised the following sums: | |
| Cash in hand | 20,000 |
| Land and Buildings | 1,30,000 |
| Plant and Machinery | 1,10,500 |
| Fixtures and Fittings | 7,500 |

The liquidation expenses amount to Rs. 2,000. A call of Rs. 2 per share on the partly paid 10,000 equity shares was made and duly paid except in case of one shareholder owning 500 shares.

பின்வரும் விபரங்கள் ஒரு வரையறு நிறுமத்தின் தன் விருப்ப கலைப்புடன் தொடர்புடையது. கலைப்பாளர்க்கு சொத்துக்களை விற்று பணமக்கப்பட்டதில் 2% கழிவும், முன்னுரிமை கடனீந்தோர்கள் தவிர பிணையமற்ற கடனீந்தோர்க்கு பகிர்ந்தளிக்கப்படும் தொயையில் 2% கழிவும் அளித்து கலைப்பாளர் இறுதி கணக்கறிக்கை தயாரிக்கவும்.

| விபரங்கள் | ரூ. |
|---|---|
| பிணையற்ற கடனீந்தோர்கள் | 2,24,000 |
| முன்னுரீமை கடனீந்தோர்கள் | 70,000 |
| கடனீட்டு பத்திரம் | 75,000 |
| பின்வருமாறு சொத்துக்கள் விற்கப்பட்டது : | |
| கைவச ரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டிடம் | 1,30,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,10,500 |
| பொறுத்தல்கள் மற்றும் அமைப்பு | 7,500 |

கலைப்புக்கான செலவுகள் ரூ. 2,000 ஆகும். 10,000 சமநிலைப் பங்குகள் மீதான அழைப்பு ரூ. 2 வீதம் முறையாக செய்யப்பட்டதில் 500 பங்குகளை கொண்ட ஒரு பங்குதாரர் தவிர மற்றவர்கள் முறையாக செலுத்தினார்கள்.

18. (a) Bring out the different methods of Inflation Accounting.

பணவீக்க கணக்கியலின் பல்வேறு முறைகளை வெளிக் கொணர்க.

Or

(b) The following balances are abstracted from the books of new Bharat life insurance corporation, as on 31-12-1998

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Life Assurance Fund (1.1.98) | 15,00,000 | Claims paid during the year | 64,900 |
| Premiums | 4,96,000 | Annuities | 2,050 |
| Consideration for annuities Granted | 15,000 | Bonus in reduction of premiums | 1,600 |
| Interest on Dividends | 1,00,000 | Medical fees | 2,400 |
| Finance for Revival of polices | 750 | Surrenders | 4,000 |
| Reinsurance premium | 20,450 | Commission | 18,650 |
| Claims outstanding (1.1.98) | 4,500 | Management Expenses | 22,000 |
| | | Income Tax on Dividends | 8,500 |

Prepare revenue account after making the following adjustments.

| | | Rs. |
|---|---|---|
| (i) | Out standing balances | |
| | (1) Claims | 14,000 |
| | (2) Premiums | 4,600 |
| (ii) | Further bonus for premium | 2,400 |
| (iii) | Claim under reinsurance | 8,000 |

பின்வரும் இருப்புகள் பாரத் ஆயுள் காப்பீட்டு கழகத்தின் 31.12.1988 வரையானது ஆகும்.

| விபரங்கள் | ரூ. | விபரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| ஆயுள் காப்பீட்டு நிதி (1.1.98) | 15,00,000 | நடப்பு ஆண்டு கோரல் செலுத்தியது | 64,900 |
| முனைமம் | 4,96,000 | ஆண்டு தொகை | 2,050 |
| ஆண்டு தொகைக்கான மறுபயன் | 15,000 | முனைமம் குறைப்பில் வெகுமதி | 1,600 |
| பங்காதாயத்தின் மீதான வட்டி | 1,00,000 | மருத்துவ கட்டணம் | 2,400 |

| விபரங்கள் | ரூ. | விபரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| திட் மீட்புக்கான நிதியியல் | 750 | ஒப்படைவுகள் | 4,000 |
| மறுகாப்பீட்டு முனைமம் | 20,450 | கழிவு | 18,650 |
| கொடுபட வேண்டிய கோரல் (1.1.98) | 4,500 | மேலாண்மை செலவுகள் | 22,000 |
| | | பங்காதயத்தின் மீதான வருமான வரி | 8,500 |

பின்வரும் சரிகட்டல்களை உருவாக்கிய பின்னர் வருவாயின கணக்கு தயாரிக்கவும்.

(i) கொடுபட வேண்டிய இருப்புகள் ரூ.

(1) கோரல்கள் 14,000

(2) முனைமம் 4,600

(ii) முனைமத்திற்கான தொடர் வெகுமதி 2,400

(iii) மறுகாப்பீட்டிற்கு கீழ் கோரல் 8,000

19. (a) The balance sheet of Sarashwathi Ltd disclosed the following position as on 31st December 1998

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share Capital | | Goodwill | 1,65,000 |
| 6,000 Eq. Shares of Rs 100 each | 6,00,000 | Investment | 5,25,000 |
| Profit and Loss A/c | 75,000 | Stock | 6,60,000 |
| General Reserve | 2,25,000 | Sundry Debtors | 3,90,000 |
| 6% Debentures | 4,50,000 | Cash at Bank | 60,000 |
| Sundry Creditors | 1,50,000 | | |
| Workmen Saving bank A/c | 3,00,000 | | |
| | 18,00,000 | | 18,00,000 |

(i) The profits for the past five years were: 1994- Rs 30,000; 1995 - Rs 70,000 1996- Rs 50,000; 1997- Rs 55,000 and 1998- Rs 95,000

(ii) The Market value of investments was Rs 3,30,000

(iii) Goodwill is to be valued at three years purchase of average annual profits for the last five years. Find out the intrinsic value of each share.

சரஸ்வதி நிறுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பு பின்வரும் நிலைமையை டிசம்பர் 31, 1998 அன்று காட்டியது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் : | | நற்பெயர் | 1,65,000 |
| 6,000 சமநிலை பங்குகள் ரூ. 100 வீதம் | 6,00,000 | முதலீடுகள் | 5,25,000 |
| இலாப மற்றும் நட்ட க/கு | 75,000 | சரக்கிருப்பு | 6,60,000 |
| பொது காப்பு | 2,25,000 | பற்பல கடனாளிகள் | 3,90,000 |
| 6% கடனீட்டு பத்திரம் | 4,50,000 | வங்கி வச ரொக்கம் | 60,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 1,50,000 | | |
| பணியாளர் சேமிப்பு வங்கி க/கு | 3,00,000 | | |
| | 18,00,000 | | 18,00,000 |

(i) கடந்த ஐந்தாண்டு இலாபங்கள் பின்வருமாறு : 1994 ரூ. 30,000, 1995 – ரூ. 70,000 1996 – ரூ. 50,000, 1997 – ரூ. 55,000ம் மற்றும் 1998 – ரூ. 95,000

(ii) முதலீடுகளின் சந்தை மதிப்பு ரூ. 3,30,000

(iii) கடந்த ஐந்தாண்டு சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் அடிப்படையில் நற்பெயர் கணக்கிடப்பட வேண்டும். ஒவ்வொரு பங்கின் நிகர (intrinsic) மதிப்பை கணக்கிடுக.

Or

(b) Explain the norms of SEBI relation to information and disclosure in Annual Report.

ஆண்டு அறிக்கையில் வெளிக்கொணர் வேண்டிய தகவல் குறித்து SEBI யின் நெறிமுறைகளை விளக்குக.

20. (a) Moon and Star Co.Ltd is a company with an authorized capital of Rs 5,00,000 divided into 5,000 equity shares of Rs. 100 each on 31-12.1985 of which 2,500 shares were fully called up. The following are the balances extracted from the ledger as on 31.12.1985.

Trail balance of Moon and Store Co.Ltd.

| Debit | Rs. | Credit | Rs. |
|---|---|---|---|
| Opening Stock | 50,000 | Sales | 3,25,000 |
| Purchase | 2,00,000 | Discount | 3,150 |
| Wages | 70,000 | P/L Account | 6,220 |
| Discount Allowed | 4,200 | Creditors | 35,200 |

| Debit | Rs. | Credit | Rs. |
|---|---|---|---|
| Insurance (Upto 31.3.86) | 6,720 | Reserves | 25,000 |
| | | Loan from M.D | 15,700 |
| Salaries | 18,500 | Share Capital (2500 × Rs. 100) | 2,50,000 |
| Rent | 6,000 | | |
| General Expenses | 8,950 | | |
| Printing | 2,400 | | |
| Advisement | 3,800 | | |
| Bonus | 10,500 | | |
| Debtors | 38,700 | | |
| Plant | 1,80,500 | | |
| Furniture | 17,100 | | |
| Bank | 34,700 | | |
| Bad Debits | 3,200 | | |
| Calls in Arrears | 5,000 | | |
| | 6,60,270 | | 6,60,270 |

You are required to prepare profit and loss account for the year ended 31.12.1985 and a balance sheet as on that date. The following further information is given:

(i) Closing stock was valued at Rs. 1,91,500

(ii) Depreciation on plant at 15% and on furniture at 10% should be provide.

(iii) A Tax provision of Rs 8,000 is considered necessary.

(iv) The directors declared an interim dividend on 15.8.85 for six months ending June 30, 1985 @6%.

மூன் மற்றும் ஸ்டார் நிறுமம் ரூ. 5,00,000த்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனத்தை 5,000 சமநிலைப் பங்குகள் ரூ. 100 வீதம் கொண்டிருந்தது. 31.12.1985 அன்று 2500 பங்குகளை முற்றிலும் அழைப்பு கொண்டது. பின்வருவன இந்த நிறுமத்தின் பேரேட்டில்லிருந்து (31.12.85) எடுக்கப்பட்டது ஆகும்.

இருப்பாய்வு

| பற்று | ரூ. | வரவு | ரூ. |
|---|---|---|---|
| ஆரம்ப சரக்கிருப்பு | 50,000 | விற்பனை | 3,25,000 |
| கொள்முதல் | 2,00,000 | தள்ளுபடி | 3,150 |
| கூலி | 70,000 | இலா/ந கணக்கு | 6,220 |
| தள்ளுபடி அனுமதித்தது | 4,200 | கடனீந்தோர்கள் | 35,200 |
| காப்பீடு (31.3.86 வரை) | 6,720 | காப்புகள் | 25,000 |
| | | M.D. யிடம் கடன் | 15,700 |

| பற்று | ரூ. | வரவு | ரூ. |
|---|---|---|---|
| ஊதியம் | 18,500 | பங்கு முதல் (2500 × ரூ. 100) | 2,50,000 |
| வாடகை | 6,000 | | |
| பொது செலவுகள் | 8,950 | | |
| அச்சு | 2,400 | | |
| விளம்பரம் | 3,800 | | |
| வெகுமதி | 10,500 | | |
| கடனாளிகள் | 38,700 | | |
| பொறி | 1,80,500 | | |
| அறைகலன் | 17,100 | | |
| வங்கி | 34,700 | | |
| வராக்கடன் | 3,200 | | |
| அழைப்பு நிலுவை | 5,000 | | |
| | 6,60,270 | | 6,60,270 |

உம்மிடம் வேண்டப்படுவது 31.12.1985 வரையான இலாப நட்ட கணக்கு தயாரிக்கவும். மேலும், அதே தேதிவரையான இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கவும். பின்வரும் தகவல்கள் உமக்கு அளிக்கப்படுகிறது.

(i) இறுதி சரக்கிருப்பு ரூ. 1,19,500 என மதிப்பிடப்பட்டது

(ii) பொறி மீது 15% மற்றும் அறைகலன் மீது 10% தேய்மானம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்

(iii) வரிக்கான ஒதுக்கு ரூ. 8,000த்தை ஒதுக்கீடு செய்க.

(iv) இந்த இயக்குநர்கள் இடைக்கால பங்காதயமாக 15.8.85 அன்று 6 மாத இறுதியான ஜூன் 30, 1985 வரைக்கும் 6% அளிக்கப்படும்.

Or

(b) Discuss about Mandatory Accounting standards.

கட்டாயமான கணக்கியல் தரநிலைகள் பற்றி விவாதி.